# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

*10 th ss* **குடிமையியல்**

## அலகு – 4 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

**I) சரியான விடையைத் தேர்வு செய்யவும்;**

1. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?
அ) பாதுகாப்பு அமைச்சர் ஆ) பிரதமஅமைச்சர்
இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர் ஈ) உள்துறை அமைச்சர்
**விடை; இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர்**

2. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது?
அ) இந்தியா மற்றும் நேபாளம் ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
இ) இந்தியா மற்றும் சீனா ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா
**விடை; இ) இந்தியா மற்றும் சீனா**

3. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?
அ) சட்ட ப் பிரிவு 50 ஆ) சட்டப் பிரிவு 51 இ) சட்டப் பிரிவு 52 ஈ) சட்டப் பிரிவு 53
**விடை; ஆ) சட்டப் பிரிவு 51**

4. இன ஒதுக்கல் கொள்கை என்பது
அ) ஒரு சர்வதேச சங்கம் ஆ) இராஜ தந்திரம்
இ) ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை
**விடை; ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை**

5. 1954இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.
அ) வியாபாரம் மற்றும் வணிகம் ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
இ) கலாச்சார பரிமாற்றங்கள் ஈ) ஐந்து கொள்கை களுடன் இணைந்திருத்தல்
**விடை; ) ஐந்து கொள்கை களுடன் இணைந்திருத்தல்**

6. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எ து?
அ) உலக ஒத்துழைப்பு ஆ) உலக அமைதி இ) இனச் சமத்துவம் ஈ) காலனித்துவம்
**விடை; ஈ) காலனித்துவம்**

7. கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாதநாடு எது?
அ) யுகோஸ்லாவியா ஆ) இந்தோனேசியா இ) எகிப்து ஈ) பாகிஸ்தான்
**விடை; ஈ) பாகிஸ்தான்**

8. பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி
அ) சமூக நலம் ஆ) சுகாதாரம் இ) ராஜ தந்திரம் ஈ) உள்நாட்டு விவகாரங்கள்
**விடை; இ) ராஜ தந்திரம்**

9. அணிசேராமை என்பதன் பொருள்
அ) நடுநிலைமை வகிப்பது ஆ) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
இ) ராணுவ மயமின்மை ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை
**விடை; ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை**

10. ராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது
அ) ஆற்றல் பாதுகாப்பு ஆ) நீர் பாதுகாப்பு இ) தொற்று நோய்கள் ஈ) இவைஅனைத்தும்
**விடை; ஈ) இவை அனைத்தும்**

**II) கோடிட்ட இடங்களை நிரப்புக;**

1. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம். --------------
**விடை; பொக்ரான்**

2. தற்போது நமது வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான -------------------- உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது.
**விடை; உள் முதலீட்டை அதிகரித்தல், வணிகம், தொழில் நுட்பம்**

3. --------- என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையைசெயல் படுத்துவதற்கான கருவி ஆகும்.
**விடை; இராஜ தந்திரம்**

4. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை. -----------
**விடை; அணி சேரா இயக்கம்**

R.MEGANATHAN,M.A.,B.Ed.,GHSS,VEEDUR
Padasalai

5. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் நடைமுறைப் ------------------- படுத்துவதாகும்.

**விடை; படை வலிமை குறைப்பு**

***III) பின்வரும் கூற்றினைப் படித்து பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்***

1. பின்வருவன வற்றைக் காலவரிசைப் படுத்தி கீழே கொடுக்கப் பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) பஞ்சசீலம்

(ii) பொக்ரானில் அணு வெடிப்புச் சோதனை

(iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்

(iv) முதல் அணுவெடிப்புச் சோதனை

அ) (i), (iii), (iv), (ii) ஆ) (i), (ii), (iii), (iv) இ) (i), (ii), (iv), (iii) ஈ) (i), (iii), (ii), (iv)

**விடை; அ) (i), (iii), (iv), (ii)**

2. பின்வருவனவற்றில் அணிசேரா இயக்கத்துடன் தொடர்பு இல்லாதது எது?

(i) அணிசேரா இயக்கம் என்ற சொல் வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.

(ii) இதன் நோக்கம் இராணுவக் கூட்டமைப்பில் சேர்ந்து வெளி விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தல் ஆகும்.

(iii) தற்போது இது 120 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

(iv) இது பொருளாதார இயக்கமாக மாற்றமடைந்துள்ளது.

அ) (i) மற்றும் (ii) ஆ) (iii) மற்றும் (iv) இ) (ii) மட்டும் ஈ) (iv) மட்டும்

**விடை; இ) (ii) மட்டும்**

3. கீழ்க்காணும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிராக சரியா/தவறா என எழுதுக

அ) பனிப் போரின் போது சர்வ தேச விவகாரங்களில் இந்தியா மூன்றாவது அணியை உருவாக்க முயற்சித்தது.

ஆ) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறை வேற்றும் பொறுப்பு இந்திய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது.

இ) இந்தியாவின் அணுசக்தி சோதனை பூமிக்கடியிலான அணு சோனை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் பட்டது.

**விடை; அ). சரி , ஆ). தவறு இ). சரி**

4. **கூற்று:** 1971 இல் இந்தோ- சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது.

**காரணம்:** இது 1962 இன் பேரழிவு கரமான சீனப் போருக்குப் பின் தொடங்கியது.

அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

**விடை; இ) கூற்று சரி காரணம் தவறு**

5. **கூற்று:** இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது.

**காரணம்:** உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்டநாடு இந்தியா ஆகும்.

அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும் ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல இ) கூற்று தவறு காரணம் சரி

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

**விடை; அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்**

6. இந்தியா சுதந்திரத்திற்குப் பின்னர் ராணுவ முகாம்களில் இணைவதைத் தவிர்ப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில், இந்தியா இதனை/ இவைகளை மீட்கவேண்டி இருந்தது

அ) கடுமையான வறுமை ஆ) எழுத்தறிவின்மை

இ) குழப்பமான சமூக பொருளாதார நிலைமைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை; ஈ) மேற்கூறிய அனைத்தும்**

***IV) .பொருத்துக ;***

1.இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது - அ. 1955

2. கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம் - ஆ . 1954

3. பஞ்சசீலம் - இ . மாலத்தீவு

Padasalai

R.MEGANATHAN, M.A, B.Ed., GHSS, VEEDUR

4. ஆப்பிரிக்க- ஆசிய மாநாடு - ஈ. வெளியுறவுக் கொள்கை
5. உலக அமைதி - உ. மியான்மர்
**விடை; 1 - இ, 2 - உ, 3 - ஆ, 4 - அ, 5 - ஈ**

## V) சுருக்கமாக விடையளிக்கவும் ;

**1. வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?**

வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசிய நலனைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பல தரப்பு உறவுகளைப் பேணவும் வடி வமைககப் பட்ட கொள்கை ஆகும்.

**2. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி.**

i). சுதந்திரம் அடைந்ததிலிருந்து உலகளவில் ஆயுதப் பெருக்கத்தடை இந்தியாவின் அணு கொள்கையில் மேலோங்கிய ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது.
ii). இதனால் ஐ.நா.வின் படை வலிமைக் குறைப்புத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்தது.
iii). 1974 மற்றும் 1998 அணு சோதனைகள் போர்த்திறமை சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே செய்யப்பட்டவையாகும்.

**3. இந்திய வெளியுறவுக் கொள்கையில் நேருவின் பங்களிப்பை எடுத்துக்கூறுக.**

i). நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 1950 மற்றும் 1960 களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள், நாட்டின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு வழிகாட்டுதலின்படி முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருந்தன.
ii). நீண்ட காலமாகக் காலனியாதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றநாடுகள் பொருளாதார மேம்பாடு தொடர்பாகக் கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டன.
iii). எனவே சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியம் (USSR) அல்லது அமெரிக்கஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றின் ஏதேனும் ஒரு முகாம்களில் சேர்வது அவசியமாயிற்று.

**4. வேறுபடுத்துக: உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை**

| **உள்நாட்டுக் கொள்கை** | **வெளிநாட்டுக் கொள்கை** |
|---|---|
| உள்நாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாகக் கொண்டுள்ள கொள்கையாகும். | வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு பிறநாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பானதாகும். |
| இது உள்விவகாரங்கள், சமூக நலம், சுகாதாரம், கல்வி, குடியியல் உரிமைகள், பொருளாதார விவகாரங்கள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட சட்டங்களை உள்ளடக்கியது. | வணிகம், அரச தந்திரம், தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு, உளவுத்துறை மற்றும் உலகளாவிய சூழல் ஆகிய வகைகளைக் கொண்டது வெளியுறவுக் கொள்கை. |

**5. பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.**

i). பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
ii). பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலைடாதிருத்தல்
iii) பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
iv). அமைதியாக சேர்ந்திருத்தல்

**6. இந்தியா அணிசேராக் கொள்கையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?**

i). நாட்டின் முதல் பிரதமரான நேரு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யாஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவில் புதிதாகத் தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார்.
ii). எனவே பனிப்போர் நிலவும் இருதுருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா வல்லரசு களுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்றவழியைத் தேர்ந்தெடுத்தோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார்.

R.MEGANATHAN.MA,B.Ed,GHS,VEDUR

***7. இந்தியாவின் பாதுகாப்புக் குறித்த அக்கறை எந்தெந்த வழிகளிலெல்லாம் பிரதிபலிக்கிறது?***

*உலகப் பாதுகாப்புக் குறித்த அக்கறை இந்தியாவின் ராணுவ நவீனமயமாக்கல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அணுசக்திக் கொள்கைகளில் பிரதிபலிக்கின்றன.*

***8. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.***

*i).பாகிஸ்தான்*
*ii).ஆப்கானிஸ்தான்,*
*iii).இந்தியா,*
*iv).நேபாளம்,*
*v).மாலத்தீவு,*
*vi). பூடான்,*
*vii).வங்காளதேசம்*
*viii).இலங்கை.*

***9. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?***

*i).இந்தியா - ஜவகர்லால் நேரு*
*ii).யுகோஸ்லாவியா - டிட்டோ*
*iii). எகிப்த் - நாசர்*
*iv).இந்தோனேசியா - சுகர்னோ*
*v).கானா - குவாமே நிக்ரூமா*

***10. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.***

*i).உடன்படிக்கைகள்*
*ii).நிர்வாக ஒப்பந்தங்கள்*
*iii).தூதுவர்களை நியமித்தல்*
*iv). வெளிநாட்டு உதவி*
*v).சர்வதேச வணிகம்*
*vi).ஆயுதப் படைகள்*

***VI) விரிவாகவிடையளிக்கவும்;***

***1. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.***

*i).'அணிசேரா இயக்கம்' என்ற சொல் 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.*
*ii).அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இதன் நோக்கம் ராணுவக் கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும்.*
*iii).அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.*
*iv).வளர்ச்சி குறைந்தநாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை நிறுவுவதில் அணிசேரா நாடுகள் வெற்றி அடைந்துள்ளன.*

***அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:***

*i).இந்தியா - ஜவகர்லால் நேரு*
*ii).யுகோஸ்லாவியா - டிட்டோ*
*iii). எகிப்த் - நாசர்*
*iv).இந்தோனேசியா - சுகர்னோ*
*v).கானா - குவாமே நிக்ரூமா*

***புதிய சவால்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள்;***

*i).இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்த போதும் சோவியத் யூனியனுடன் 1971 ஆம் ஆண்டில் இந்திய – சோவியத் ஒப்பந்தத்தின் (20 ஆண்டு கால ஒப்பந்தமான அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு) மூலம் இணைந்தது.*

Padasalai
P.MEGANATHAN, M.A,B.Ed,GHSS,VEEDUR

*ii). பின்னர் இந்தியா ராணுவ நவீனமயமாக்கலை மேற்கொண்டது. சீனா 1964ஆம் ஆண்டு லாப் நார் என்னுமிடத்தில் மேற்கொண்ட அணு சோதனைக்குப் பதிலடியாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனைத் திட்டத்தினை 1974 இல் நடத்தியது.*

***2. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகளைப் பற்றி விவாதிக்கவும்.***

*i). நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு*
*ii). நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை*
*iii). இயற்கை வளங்கள்*
*iv). பொருளாதார வளர்ச்சியின் அவசியம்*
*v). அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு*
*vi). அமைதிக்கான அவசியம், ஆயுதக்குறைப்பு, அணு ஆயுதப் பெருக்கத்தடை*
*vii). ராணுவ வலிமை*
*viii). சர்வதேச சூழ்நிலை*

***3. அண்டை நாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளைப் பட்டியலிடுக.***

*i). தேசிய நலனைப் பேணுதல்*
*ii). உலக அமைதியைஎய்துதல்*
*iii). ஆயுதக்குறைப்பு*
*iv). பிறநாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்*
*v). அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்*
*vi). அணி சேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு*
*vii). சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்*
*viii). காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு*

Padasalai
R.MEGANATHAN.MA,B.Ed,GHSS,VEEDUR

## வரலாறு

## அலகு – 6 ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்க கால கிளர்ச்சிகள்

***I) சரியான விடையைத் தேர்வு செய்யவும்***

1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்ட பொம்மன்
**விடை; ஆ) பூலித்தேவர்**

2. கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடனாகப் பணத்தை வாங்கியவர் யார்?
அ) வேலுநாச்சியார் ஆ) பூலித்தேவர் இ) ஆற்காட்டு நவாப் ஈ) திருவிதாங்கூர் மன்னர்
**விடை; இ) ஆற்காட்டு நவாப்**

3. சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர்யார்?
அ) வேலுநாச்சியார் ஆ) கட்டபொம்மன் இ) பூலித்தேவர் ஈ) ஊமைத்துரை
**விடை; இ) பூலித்தேவர்**

4. சிவ சுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப் பட்டார்?
அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி
**விடை; ஆ) நாகலாபுரம்**

5. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர் இ) வீரபாண்டிய கட்ட பொம்மன் ஈ) கோபால நாயக்கர்
**விடை; அ) மருது சகோதரர்கள்**

6. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
அ) 1805 மே24 ஆ) 1805 ஜூலை10 இ) 1806 ஜூலை10 ஈ) 1806 செப்டம்பர்10
**விடை; இ) 1806 ஜூலை10**

7. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதி முறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர்ஆர்ம்ஸ்ட்ராங் இ) சர்ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ
**விடை; இ) சர்ஜான் கிரடாக்**

8. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டெல்லி ஈ) மைசூர்
**விடை; அ) கல்கத்தா**

***II) கோடிட்ட இடங்களை நிரப்புக;***

1. பாளையக்காரர் முறை தமிழகத்தில் -------------- என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்டது.
**விடை; விஸ்வநாத நாயக்கர்**

2. ----------- பாளையக்காரரைத் தவிர மேற்குப்பகுதியில் வீற்றிருந்த பாளையக்காரர்கள் அனைவரும் பூலித்தேவரை ஆதரித்தனர்.
**விடை; சிவகிரி**

3. வேலு நாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக --------- பாதுகாப்பில் இருந்தனர்.
**விடை; கோபால நாயக்கர்**

4. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலைத் தெரிவிக்க பானெர்மென் ---------- என்பவரை அனுப்பிவைத்தார்.
**விடை; இராமலிங்கனார்**

5. கட்டபொம்மன் -------------- என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
**விடை; கயத்தாறு**

6. மருது சகோதரர்களின் புரட்சி பிரிட்டிஷ் குறிப்புகளில் ------ என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.
**விடை; இரண்டாம் பாளையக் காரர் போர்**

7. ------ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதியசுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
**விடை; ஃபதேக் ஹைதர்**

8. வேலூர் கோட்டையில் புரட்சியை ஒடுக்கியவர் --------------- ஆவார்.
**விடை; கர்னல் ஜில்லஸ்பி**

R.MEGANATHAN.M.A,B.Ed,GHSS,VEDUR
Padasalai

**III) சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. (i) பாளையக்காரர் முறை காகத்தீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது
(ii) கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும்செவலை 1764 இல் மீண்டும் கைப்பற்றினார்.
(iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப் கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.
(iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.

அ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவைசரி ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவைசரி
இ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி ஈ) (i) மற்றும் (iv) மட்டும் சரி

**விடை; ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவைசரி**

2. (i) கர்னல் கேம்ப்பெல் தலைமையின் கீழ் ஆங்கிலேயப் படைகள் மாபூஸ்கானின் படைகளோடு இணைந்து சென்றன.
(ii) காளையார் கோவில் போரி ல் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டப் பின் வேலுநாச்சியார் மீண்டும் அரியணையைப் பெறுவதற்கு மருது சகோதரர்கள் துணைபுரிந்தனர்.
(iii) திண்டுக்கல் கூட்டமைப்புக்கு கோபால நாயக்கர் தலைமையேற்று வழிநடத்தினார்.
(iv) காரன்லிஸ் மே1799 இல் கம்பெனிப் படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார்.

அ) (i) மற்றும் (ii) ஆகியவைசரி ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவைசரி
இ) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவைசரி ஈ) (i) மற்றும் (iv) ஆகியவைசரி

**விடை; ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவைசரி**

3. **கூற்று**: பூலித்தேவர், ஹைதர்அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெறமுயன்றார்.
**காரணம்**: மராத்தியர்களோடு ஏற்கனவேத தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர்அலியால் பூலித்தேவருக்கு உதவ முடியாமல் போனது.
அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவைசரி எனினும் காரணம், கூற்றைச் சரியாகவிளக்கவில்லை.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டு மேதவறானவை.
இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவைசரி காரணம், கூற்றைச் சரியாகவேவிளக்குகிறது.
ஈ) கூற்று தவறானது காரணம் சரியானது
**விடை; அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவைசரி எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்க வில்லை.**

4. **கூற்று**: புதிய இராணுவ நெறிமுறை மட்டுமல்லாமல் தலைப்பாகையில் வைக்கப்படும் தோலிலான இலட்சினையும் கடும் எதிர்ப்பை விளைவித்தது.
**காரணம்**: தோல் இலட்சினை விலங்குகளின் தோலில் செய்யப்பட்டது.
அ) கூற்று தவறானது காரணம் சரியானது
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகியவைசரி காரணம், கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.
இ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறானவை.
ஈ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.
**விடை; ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகியவைசரி காரணம், கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.**

## IV) பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. தீர்த்தகிரி | - | அ. வேலூர் புரட்சி |
| 2. கோபால நாயக்கர் | - | ஆ. இராமலிங்கனார் |
| 3. பானெர்மென் | - | இ. திண்டுக்கல் |
| 4. சுபேதார் ஷேக் ஆதம் | - | ஈ. வேலூர்கோட்டை |
| 5. கர்னல் பேன்கோர்ட் | - | உ ஓடாநிலை |

**விடை; 1 – உ , 2 – இ , 3 – ஆ , 4 – அ , 5 - ஈ**

## V) சுருக்கமாக விடையளிக்கவும்

1. **பாளையக் காரர்களின் கடமைகள் யாவை?**
i)பாளையக்காரர்களால் வரிவசூலிப்பதிலும், நிலப்பகுதிகளை நிர்வகிப்பதிலும், வழக்குகளை விசாரிப்பதிலும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் தன்னிச்சையாகச் செயல்படமுடிந்தது.

R.MEGANATHAN, M.A.,B.Ed.,GHSS,VEEDUR

*ii)அவர்களது காவல் காக்கும் கடமைபடிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது.*

***2. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப் பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.***

***கிழக்கில் அமையப்பெற்ற பாளையங்கள்***

*சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி*

***மேற்கில் அமையப்பெற்ற பாளையங்கள்***

*ஊத்துமலை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, சேத்தூர்..*

***3. ஹெறான் ஏன் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டார்?***

*i).கம்பெனிக்குக் கீழ்ப்படிய மறுத்துவந்த பூலித்தேவரை அடக்க கர்னல் ஹெறான் பணிக்கப்பட்டார்.*

*ii).மேற்குப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.*

*iii).பீரங்கிகளின் தேவையும் துணைக்கலப்பொருட்கள் மற்றும் படைவீரர்களின் ஊதியம் உள்ளிட்ட காரணங்களினால் ஹெறான் தனது திட்டத்தைக் கைவிட்டு மதுரைக்கு திரும்பினார். கம்பெனி நிர்வாகம் அவரைத் திரும்ப அழைத்ததோடு நிரந்தரப் பணிநீக்கம் செய்தும் உத்தரவிட்டது.*

***4. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?***

*i). கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படை வீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார்.*

*ii). மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலை நிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர்.*

*iii).களக்காட்டில் நடைபெற்றப் போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.*

***5. கம்னியாருக்கும் கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?***

*i).பாஞ்சாலங் குறிச்சியிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது.*

*ii).அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளைவசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது.*

*iii).ஆட்சியர்கள் பாளையக்கரர்களை அவமானப் படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர்.*

*iv).இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.*

***6. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளைத் தருக.***

*i).பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே 1801 ஆம் ஆண்டின் பேரறிக்கைஆகும்.*

*ii).இப்பேரறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன்சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது.*

*iii).ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர்.*

*iv).புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள். ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.*

***7. 1801ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.***

*1801 ஜூலை 31இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி, பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்ததுடன் அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.*

R.MEGANATHAN.M.A.,B.Ed.,GHSS,VEEDUR

**VI) ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக் கவும்**

1. **வேலுநாச்சியார்**

அ) வேலுநாச்சியாரின் இராணுவத் தளபதி யார்?

**விடை; தளவாய் தாண்டவராயனார்**

ஆ) அவர்தேர்ச்சி பெற்றிருந்த தற்காப்புக் கலைகள் எவை?

**விடை; வளரி, சிலம்பம், குதிரையேற்றம், வில் வித்தை**

இ) அவர் யாரை மணமுடித்தார்?

**விடை; முத்து வடுக நாதர்**

ஈ) அவரது மகளின் பெயர் என்ன?

**விடை; வெள்ளச்சி நாச்சியார்**

2. **தீரன் சின்னமலை**

அ) தீரன் சின்னமலை எப்போது பிறந்தார்?

**விடை; 1756**

ஆ) 'சின்னமலை' என்ற பட்டப்பெயரை அவர்எவ்வாறு பெற்றார்?

**விடை; முகம்மது அலியிடம் சிவமலைக்கும், சென்னிமலைக்கு இடையே இருந்த 'சின்னமலையே' வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டதாக சுல்தானுக்குப் போய்ச் சொல் என்று அறிவுறுத்தினார். அதன் பிறகே'தீரன் சின்னமலை' என்று அவர் அழைக்கப்படலானார்**

இ) திப்பு சுல்தானின் திவானின் பெயர்யாது?

**விடை; முகமது அலி**

ஈ) அவர் எங்கு, ஏன் தூக்கிலிடப்பட்டார்?

**விடை; i).ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வற்புறுத்தப்பட்டபோது அவர் அதற்கு இணங்க மறுத்தார். ii).அதனால் 1805 ஜூலை 31 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர் தூக்கிலிடப்பட்டார்.**

**VII) விரிவாக விடை யளிக்கவும்**

**1. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரைவரைக**

**ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல் ;**

i).கட்ட பொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையானது 1798ஆம் ஆண்டு வாக்கில் 3310 பகோடாக்களாக இருந்தது.

ii).1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்னைச் சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு ஜாக்சன்ஆணை பிறப்பித்தார்.

iii).ஆனால் கட்ட பொம்மன் மேற்கொண்டமுயற்சி பலனளிக்காததோடு குற்றாலம் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களிலும் ஜாக்சன் அவரைச் சந்திக்க மறுத்தார்.

iv).இறுதியாக 1798 செப்டம்பர் 19 அன்று அனுமதியளித்ததன் பேரில் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார்.

v).ஆணவத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்த ஜாக்சனின் முன்பு கட்ட பொம்மன் மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆபத்தை உணர்ந்த கட்ட பொம்மன் தனது அமைச்சரான சிவசுப்ரமணியனாருடன் தப்பிச்செல்லமுயன்றார்.

vi).உடனடியாக ஊமைத்துரை தனது ஆட்களோடு கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்ப உதவினார்.

**மதராஸ் ஆட்சிக் குழுவின் முன்பாக ஆஜராதல்:**

i).பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்ட பொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை எவ்வாறெல்லாம் அவமானப் படுத்தினார் என்பதை மதராஸ் ஆட்சிக்குழுவிற்குத் தெரியப்படுத்தினார்.

ii).குழுவின் முன்பாக 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார். கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று குழு முடிவுசெய்தது.

R.MEGANATHAN.MA,B.Ed,GHSS,VEEDUR
Padasalai

**கட்ட பொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும்;**

i).இதற்கிடையே, திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், ஆனைமலையின் யதுல் நாயக்கர் போன்ற அருகாமையிலிருந்த பாளையங்களை உள்ளடக்கிய தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையின் மருதுபாண்டியர் ஏற்படுத்தினார்.
ii).இக்கூட்டமைப்பு கட்ட பொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது.
iii).ஆனால் மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள்.
iv).கட்டபொம்மனைச் சரணடையக் கோரிய நிபந்தனையொன்று 1799 செப்டம்பர் 1 அன்று வழங்கப்பட்டது. கட்டகொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் மேஜர் பானெர்மென் கோட்டையைத் தாக்கினார்.
v).பானெர்மென் செப்டம்பர் 5 அன்று முழுப் படைகளையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டுவந்து நிறுத்தினார்.
vi).பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார்.
vii) கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பானெர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார்.

**2. சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.**

i).ஆங்கிலேயர்கள் மே 1801 இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள்.
ii).கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் படைகளால் மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர்.
iii)கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது.
iv).இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
v).ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16 இல் பாஞ்சாலங்குறிச்சியில் தலைதுண்டிக்கப்பட்டனர்.
vi).கலகக்காரர்களில் 73 பேர்பிடிக்கப்பட்டு மலேயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள்.
Vii).பாளையக்காரர்கள் வீழ்ச்சியடைந்தாலும் அவர்களது வீரமும், தியாகமும் எதிர்காலச் சந்ததிகளை ஈர்ப்பதாக அமைந்தது.

**3. வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.**

i).கட்டபொம்மன் எதிர்ப்பு (1799), மருது சகோதரர்களின் எதிர்ப்பு (1801) ஆகியவற்றை ஒடுக்கியப் பின்பு, பிரிட்டிஷார் ஆற்காட்டு நவாபை விசுவாசமற்றவர் என்று குற்றம்சுமத்தி அவர்மீது கட்டாயப்படுத்தி ஒரு ஒப்பந்தத்தைத் திணித்தனர்.
ii).1801இல் ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தின்படி, ஆற்காட்டு நவாப் வடஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை அவற்றை நிர்வகிக்கும் அதிகாரத்தோடு ஒப்படைத்து விடவேண்டும் என்றானது.

**இந்திய வீரர்களின் மனக்குறை:**

i).ஆனாலும் எதிர்ப்பு அடங்கிவிடவில்லை. வெளியேற்றப்பட்ட சிற்றரசர்களும், நிலச்சுவான்தார்களும் கம்பெனி அரசுக்கு எதிராக எதிர்காலத் திட்டம் குறித்து நிதானமாக சிந்தித்துக்கொண்டே இருந்தார்கள்.
ii).இதன் விளைவாக வெளிப்பட்டதே 1806ஆம் ஆண்டு வேலூர்புரட்சியாகும். புரட்சியின் இறுதி நிகழ்வு அந்நிய ஆட்சியைதூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
iii).பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றியவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது.
iv). பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருப்பது ஆகியவற்றை நினைத்து கடுமையான கோபத்துடனே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

RMEGANATHAN.MA.B.Ed,GHS,VEDUR
Padasalai

*v). தங்களின் சமூகமற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும், மேலும் அவர்களின் கோபத்தை வலுப்படுத்தியது.*
*vi). புதிய விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதணிகளையோ அணியக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப் பட்டனர்.*
*Vii). அவர்கள் தாடையை முழுமையாகச் சவரம் செய்யவும் மீசையை ஒரேபாணியில் வைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டார்கள்.*
*viii) புதிய வகை தலைப்பாகை எரிகிறதீயில் எண்ணெய் சேர்ப்பது போலானது. மிகவும் ஆட்சேபனைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. தலைப்பாகையில் வைக்கப்படும் விலங்கு தோலினால் ஆன இலட்சினையாகும்.*
*ix). புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனைகவனத்தில் கொள்ளவில்லை.*

**ALL THE BEST**

**BY**

**R.MEGANATHAN. MA,B.ed**
**( B,T ASST. SOCIAL SCIENCE)**
**GHSS, VEEDUR 605652**
**PH: 9543255318**

R.MEGANATHAN.MA.B.Ed,GHSS,VEEDUR
Padasalai

**வரலாறு**

## அலகு – 7 காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்.

**I) சரியானவிடையைத் தேர்வுசெய்யவும் :**

1.1818ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்ட வற்றில் எதனைத் தொடங்கினார்?

அ) வஹாபிகிளர்ச்சி ஆ) ஃபராசிஇயக்கம் இ) பழங்குடியினர்எழுச்சி ஈ) கோல்கிளர்ச்சி

**விடை; ஆ) ஃபராசிஇயக்கம்**

2.'நிலம் கடவுளுக்குச் சொந்தம் என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச்சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர்யார்?

அ) டிடுமீர் ஆ) சித்து இ) டுடுமியான் ஈ) ஷரியத்துல்லா

**விடை; இ) டுடுமியான்**

3 நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்?

அ) சாந்தலர்கள் ஆ) டிடுமீர் இ) முண்டா ஈ) கோல்

**விடை; அ) சாந்தலர்கள்**

4.கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதியார்?

அ) தாதாபாய்நௌரோஜி ஆ) நீதிபதிகோவிந்த்ரானடே இ). பிபின் சந்திரபால் ஈ) ரொமேஷ்சந்திரா

**விடை; இ). பிபின் சந்திரபால்**

5.வங்கப்பிரிவினை எந்தநாளில் நடைமுறைக்கு வந்தது?

அ) 1905 ஜூன் 19 ஆ) 1906 ஜூலை 18 இ) 1907 ஆகஸ்ட் 19 ஈ) 1905 அக்டோபர் 16

**விடை; ஈ) 1905 அக்டோபர் 16**

6. சோட்டாநாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறை வேற்றப்பட்டது?

அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி, இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்

**விடை; இ) முண்டா கிளர்ச்சி**

7.1916ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்?

அ) அன்னிபெசன்ட் அம்மையார் ஆ) பிபின்சந்திரபால் இ) லாலாலஜபதிராய் ஈ) திலகர்

**விடை; ஈ) திலகர்**

8.நீல் தர்ப்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்?

அ) தீனபந்துமித்ரா ஆ) ரொமேஷ்சந்திரதத் இ) தாதாபாய்நௌரோஜி ஈ) பிர்சாமுண்டா

**விடை; அ) தீனபந்துமித்ரா**

**II) .கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1.1757ஆம் ஆண்டு ராபர்ட்கிளைவுக்கு ------ என்றுஅழைக்கப்பட்ட வங்காளத்தின் கடன்வழங்குவோர்நிதி ஆதரவுதந்தனர்.

**விடை; ஜகத் சேத்துக்கள்**

2.மன்னராட்சிக்கும் நிலசுவான்தாரர்களுக்கும் எதிரான --------- இயக்கம் 1827ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டது.

**விடை; வாஹாபி**

3.சோட்டாநாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி ------------

**விடை; கோல் கிளர்ச்சி**

4. ----------- சட்டம பழங்குடியினரல்லாத மக்களை பழங்குடி நிலத்தில் நுழைய தடைவிதித்தது.

**விடை; சோட்டா நாக்பூர் குத்தகை**

5.1854ஆம் ஆண்டு வாக்கில் ---------- தலைமையில் சமூகக்கொள்ளை நடவடிக்கைகள் நடந்தன.

**விடை; பீர்சிங்**

6.1857ஆம்ஆண்டின் கிளர்ச்சியில் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்ட ஆங்கிலேய தளபதி ---------

**விடை; மேஜர் ஜெனரல் ஹக் வீலர்**

7.சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு --------------- **விடை; 1908**

8.W.C. பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு ----------

**விடை; 1885**

**III) .சரியான கூற்றைத் தேர்வு செய்யவும் ;**

1.(i). மீர்ஜாபரிடம் இருந்து 2 கோடியே 25 லட்ச ரூபாயை வாங்கிய கிழக்கு இந்தியகம்பெனி

R.MEGANATHAN.M.A.,B.Ed.,GHSS,VEEDUR Padasalai

அதனை பிரிட்டனில் தொழிற்புரட்சி மேம்பட முதலீடுசெய்தது.
(ii). 1831 - 1832ஆம்ஆண்டு அரசு அதிகாரிகள் மற்றும் கடன் கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியைக் கோல் மக்கள் ஒருங்கிணைத்தனர்,
(iii) 1855 ஆம் ஆண்டில் சாந்தலர் கிளர்ச்சிக்கு சித்து, கனு ஆகிய இரண்டுசாந்தலர் சகோதரர்கள் தலைமை ஏற்றனர்.
(iv) 1879 ஆம்ஆண்டில் சாந்தலர்கள் வசம் இருந்த பகுதிகளை ஒழுங்கு முறைப்படுத்த ஒருசட்டம் இயற்றப்பட்டது.
(அ) (i) (ii) மற்றும் (iii) சரியானவை (ஆ) (ii) மற்றும் (iii) சரியானவை
(இ) (iii) மற்றும் (iv) சரியானவை ஈ) (i) மற்றும் (iv) சரியானவை .

**விடை; (அ) (i) (ii) மற்றும் (iii) சரியானவை**

2.(i) .இஸ்லாமிய மதத்தின் சமத்துவ இயல்பை வலியுறுத்தியரடுடுமியான் நிலம் கடவுளுக்குச் சொந்தமானது என்று அறிவித்தார்.
(ii) .ஊழல் கறைபடிந்த இந்திய ஆட்சியாளர்களின் வசம் இருந்தபகுதிகள் வாரிசு இழப்புக் கொள்கையின் படிஆங்கிலேய ஆட்சியின் கீழ் இணைக்கப்பட்டன.
(iii) .1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பிறகு சட்டத்தைப் பின்பற்றாமல் இந்தியர்கள் பற்றிய வழக்குகளை விசாரித்து அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கவும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
(iv) 1857ஆம்ஆண்டின்கிளர்ச்சி தோல்வி அடைந்ததற்கு ஆங்கிலேயருக்கு இந்திய இளவரசர்களும் ஜமீன்தாரர்களும் விசுவாசமாக இருந்ததும் அதற்கான பல்வேறு காரணங்களில் ஒன்றாகும்.
(அ) (ii), (iii) மற்றும் (iv) சரியானவை
(ஆ) (i) (ii) மற்றும் (iv) சரியானவை
(இ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை
(ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை

**விடை; (இ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை**

3. (i) காலனிஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனத்தைச் செய்தது ஆரம்பகால இந்திய தேசிய வாதிகளின் மிகமுக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாகும்.
(ii) இந்தியாவில் வறுமை அதிகரிக்க சமயரீதியிலான சுரண்டலே மிகமுதன்மையான காரணம் என்று ஆரம்பகால காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர்.
(iii) சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சியை எட்டுவதே மிததேசியவாத காங்கிரஸ்\ தலைவர்களின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது.
(iv) வங்காளத்தின் ஆதிக்கத்தை குறைப்பதையும் தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு வங்கப்பிரிவினை நடந்தது.
(அ) (i) மற்றும்(iii) சரியானவை (ஆ) (i), (iii) மற்றும்(iv) சரியானவை
(இ) (ii) மற்றும்(iii) சரியானவை (ஈ) (iii) மற்றும்(iv) சரியானவை

**விடை; (ஆ) (i), (iii) மற்றும்(iv) சரியானவை**

4.**கூற்று:** இந்தியவரலாற்றில் முதன்முறையாக காலனி ஆட்சியின் கீழ் அரசுவனங்களின் மீது நேரடி தனியுரிமையைக் கோரியது
**காரணம்:** இண்டிகோ விவசாயம் செய்யுமாறு விவசாயிகளை நிர்ப்பந்திக்கதொழில் செய்வோர் மிரட்டல் மற்றும் வன்முறையைக் கையாண்டனர்.
அ) கூற்றுமற்றும்காரணம் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றுக்கானசரியான விளக்கம்இல்லை
ஆ) கூற்றுமற்றும்காரணம் இரண்டுமே தவறு. (இ) கூற்றுமற்றும்காரணம் இரண்டுமே சரி அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும். (ஈ) கூற்றுதவறு காரணம் சரி,

**விடை; அ) கூற்றுமற்றும்காரணம் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றுக்கானசரியான விளக்கம்இல்லை**

5. **கூற்று ;** பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியைஇரும்புக்கரம்கொண்டு அடக்கியது.
**காரணம்:** மையப் படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்விகண்டது.
அ) கூற்றுமற்றும்காரணம் இரண்டுமே தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி.
(இ) கூற்று மற்றும் காரணம் இரண்டு மேசரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும். (ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமேசரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை .

**விடை; (இ) கூற்று மற்றும் காரணம் இரண்டு மேசரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான**

R.MEGANATHAN,M.A,B.Ed,GHSS,VEDUR
Padasalai

## IV.பொருத்துக

1. வஹாபி கிளர்ச்சி - அ. லக்னோ
2. முண்டாகிளர்ச்சி - ஆ. பேஷ்வா இரண்டாம் பாஜிராவ்
3. பேகம் ஹஸ்ரத் மகால் - இ. டிடுமீர்
4 கன்வர்சிங் - ஈ. ராஞ்சி
5. நானாசாகிப் - உ பிகார்

**விடை; 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – உ, 5 - ஆ**

## V).சுருக்கமாக விடை யளிக்கவும்

**1.ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?**

i). **மறுசீரமைத்தலுக்கான கிளர்ச்சி**
ii) .**சமய இயக்கங்கள் கிளர்ச்சி**
iii) .**சமூகக் கொள்ளை கிளர்ச்சி**
iv). **மக்களின் கிளர்ச்சி கிளர்ச்சி**

**2.1857ஆம் ஆண்டின் கான்பூர் படுகொலை பற்றி குறிப்பு வரைக.**

i).1857ஆம்ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகையாகும்.
ii).கான்பூரில் சுற்றிவளைக்கப்பட்ட கம்பெனிப் படைகளும் இராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்குத் தயாராக இல்லாததால் நானாசாகிப் தலைமையிலான கிளர்ச்சி ப் படைகளின் கீழ்சரணடைந்தனர்.
iii). அவர்கள்பயணம் செய்தபடகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட பெரும்பாலும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.

**3.வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்,**

i).சதாரா
ii).சம்பல்பூர்
iii). பஞ்சாபின் சில பகுதிகள்
iv).ஜான்சி
v).நாக்பூர்

**4.வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச்சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?**

i).பிரிட்டிஷாரின் மூலதனத்தை முதலீடு செய்யவும், ஆங்கிலேய உற்பத்திப் பொருட்களை கொண்டு சேர்க்கும் ஒரு சந்தையாகவும் இந்தியா உருவானது.
ii).இந்தியாவுக்கு எந்தவித ஆதாயமுமின்றி இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்குத் தொடர்ந்து வளங்களைப் பரிமாற்றம் செய்யும் விதமாக காலனி ஆட்சியின் கீழ் பொருளாதாரம்அமைந்தது. இதுவே வளங்களின் சுரண்டலாக (செல்வச் சுரண்டல்) அறியப்பட்டது.

**5.ஆக்கபூர்வ சுதேசி இயக்கம்பற்றிய கொள்கையை விவரிக்கவும்,**

i).ஆக்கபூர்வ திட்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் சுய உதவியையேவ லியுறுத்தின.
ii).ஆங்கிலேய ஆட்சியின் கட்டுப்பாட்டில் சிக்காமல் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளை மாற்றாக உருவாக்குவது குறித்து அது கவனம் செலுத்தியது.
iii).துணிகள், கைத்தறி ஆடைகள், சவக்காரம் (சொப்புகள்), மண்பாண்டங்கள், தீப்பெட்டி, தோல்பொருட்கள் ஆகியன எங்கும்பரவியிருந்த சுதேசி கடைகளில் விற்கப்பட்டன.

**6. தன்னாட்சி (ஹோம்ரூல்) இயக்கத்தின் குறிக் கோள்களை விவரிக்கவும்,**

i).அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.
ii).தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியைஅடைவது.
iii).அவர்களின் இலக்குகளை அடைய வன் முறையல்லாத அரசியல்சாசன வழிமுறைகளைக் கையாள்வது.

Padasalai
R.MEGANATHAN.MA,B.Ed,GHSS,VEEDUR

***7.லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்,***

*i).லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டு மென்பதை ஏற்றுக் கொண்டது.*

*ii). இதற்கு பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றது.*

## ***VI) ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப் பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும்***

***1.தக்காண கலவரங்கள்***

*அ) தக்காணத்தில் கடன்வழங்கியோருக்கு எதிராக முதல் கலவரச் சம்பவம் எங்கு மற்றும் எப்போது நடந்ததாகப் பதிவாகியுள்ளது?*

***விடை; சூபா , 1875***

*ஆ) பிரிட்டிஷாரின் புதிய சட்டத்தின்கீழ் கடன் வழங்கியோருக்கு கொடுக்கப்பட்ட புதிய உரிமை என்ன?*

***விடை; நிலத்தை ஏலம்விட்டு கடன் தொகையை எடுத்துக் கொள்ள கடன் வழங்கியோருக்கு அனுமதி வழங்கப் பட்டது***

*இ) அதனால் ஏற்பட்ட விளைவுஎன்ன?*

***விடை; உழும் வர்க்கத்திடமிருந்து நிலம் உழாத வர்க்கத்திடம் கைமாறத் தொடங்கியது.***

*ஈ) தக்காண கலவரங்கள் யாருக்கு எதிராக குறிவைத்து நடத்தப் பட்டன?*

***விடை ; குஜராத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோரை***

***2.1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி***

*அ) 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்த நிகழ்வில்தனது அதிகாரியை தாக்கியவர் யார்?*

***விடை; மங்கள் பாண்டே***

*ஆ) தில்லியில் ஷாஹின்ஷா இ-ஹிந்துஸ்தான் என்று அழைக்கப்nபட்டவர் யார்?*

***விடை; இரண்டாம் பகதூர் ஷா***

*இ) 1857ஆம் ஆண்டின் கொடுமைகளை பற்றிய செய்தியை லண்டன் டைம்ஸ் நாளேட்டில் வெளியிட்ட பத்திரிகையாளர் யார்?*

***விடை ; வில்லியம் ஹோவர்ட் ரஸ்ஸல்***

*ஈ) அரசியின் பேரறிக்கையில் தொடர்பான விஷயங்கள் பற்றி என்ன கூறப்பட்டது?*

***விடை; பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார்.***

***3.இந்திய தேசியகாங்கிரஸ்***

*அ) தமது முறையீடுகள் தீர்க்கப்படுவதற்கு காங்கிரஸ் கட்சி கையாண்ட வழிமுறைகள் என்ன?*

***விடை; பிரிட்டனிடம் மேல்முறையீடுகள் செய்வது, மனுக்களைக் கொடுப்பது, அதிகாரப் பகிர்வு, உள்ளிட்ட வழிமுறைகளை காங்கிரஸ் பின்பற்றியது.***

*ஆ) லால்-பால்-பால் (Lal-Bal-Pal) ஆகியமூவர் பற்றி அறிந்தது என்ன?*

***விடை; பஞ்சாபின் லாலா லஜ்பதி ராய், மகாராஷ்டிராவின் பால கங்காதர திலகர், வங்காளத்தின் பிபின் சந்திர பால், ஆகிய மூன்று முக்கிய தலைவர்களும் சுதேசி காலத்தில் எப்போதும் லால்-பால்–பால் (Lal-Bal-Pal) மூவர் என்று குறிக்கப்பட்டனர்.***

*இ) இந்திய தேசிய காங்கிரஸின் முதலாவது அமர்வு எங்கு நடந்தது?*

***விடை; பம்பாய்***

*ஈ) சுதேசி இயக்கம் மீது ஆங்கிலேயர் எவ்வாறு பதில் நடவடிக்கைஎடுத்தனர்?*

***i).முக்கிய தலைவர்கள் சிறைகளில் நீண்டகாலத்துக்கு அடைபட்டார்கள்;***

***ii). புரட்சியாளர்கள் தூக்கில் தொங்கவிடப் பட்டனர்.***

***iii). பத்திரிகை சுதந்திரம் முடக்கப்பட்டது.***

R.MEGANATHAN.M.A,B.Ed,GHSS,VEEDUR

Padasalai

**VII) விரிவாக விடையளிக்கவும்**

**1. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.**

**காரணங்கள்:**

i). புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்திகள் புரட்சிக்கு வித்திட்டது.
ii). பசு மற்றும் பன்றிக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பசை (கிரீஸ்) இத்தகைய புதிய குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்) பயன்படுத்தப் பட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர்.
iii). அவற்றை நிரப்பும் முன் அதை வாயால் கடிக்கவேண்டி இருந்தது (இந்துக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பசு புனிதம்வாய்ந்ததாகவும், முஸ்லிம்களுக்கு பன்றி இறைச்சி தடை செய்யப்பட்ட உணவாகவும்இருந்தது).
iv). மார்ச் 29 ஆம் தேதி மங்கள்பாண்டே என்ற பெயர் கொண்ட சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.
v). கைது செய்ய உத்தரவிட்டும் அவரது சகசிப்பாய்கள் மங்கள் பாண்டேவை கைது செய்ய மறுத்துவிட்டனர்.
vi). மங்கள் பாண்டேயும் வேறு பலரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். இதனால் ஆத்திரம் அதிகரித்து அதனையடுத்து வந்த நாட்களில் கீழ்ப்படிய மறுத்தல் போன்ற பல நிகழ்வுகள் அதிகரித்தன.

**பின்விளைவுகள்:**

i). 1857ஆம் ஆண்டின் நிகழ்வுகளை அறிந்து ஆங்கிலேயர் அதிர்ந்தனர்.
ii). 1858 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசு சட்டம் பிரிட்டிஷ் நாடாளு மன்றம் ஏற்றுக் கொள்ளப் பட்டு, நாடாளுமன்றத்தால் நேரடியாக ஆட்சி அதிகாரம் செலுத்தப்படும் ஆங்கிலேய அரசின் காலனிகளில் ஒன்றாக இந்தியா அறிவிக்கப்பட்டது.
iii). அமைச்சரவை உறுப்பினர் ஒருவரிடம் பொறுப்பு வழங்கப்பட்டது அவர் இந்தியாவுக்கான அரசுச் செயலராக பதவி வகிப்பார்.
iv). கிழக்கு இந்திய கம்பெனியிடம் இருந்து பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கான அதிகாரப் பகிர்வு, இந்திய விவகாரங்கள் குறித்து நாடாளுமன்ற கண்காணிப்பு நிரந்தரமாக இருந்ததை வெளிப் படுத்தியது.

**2. 1905ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின் போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?**

i). பிரிவினைபற்றி யோசனை கூறப்பட்ட நிலையிலேயே அதனை மித தேசியவாதிகள், தீவிர தேசிய வாதிகள் ஆகிய இரு பிரிவு தலைவர்கள் குழுக்களும் விமர்சனம் செய்தன.
ii). வேண்டு கோள்கள், செய்திப் பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக்கூட்டங்கள், ஆகியவற்றின் மூலமாகப் பிரிவினைக்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.
iii). விரிவான ஆர்ப்பாட்டங்கள் நடந்த போதிலும் 1905 ஜூலை 19இல் வங்கப் பிரிவினை அறிவிக்கப் பட்டது.
iv) வங்கப் பிரிவினையை தடுக்கத் தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், தங்களுடைய உத்திகள் பற்றி மறு சிந்தனைக்கு நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.
v). ஆர்ப்பாட்டங்களுக்கு புதிய வழிமுறையையும் அவர்கள் தேடத் தொடங்கினார்கள். பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பது அவற்றில் ஒரு முறையாகும்.
vi). 905 அக்டோபர் 16 இல் வங்காளம் அதிகாரபூர்வமாகப் பிரிவினையான போது அந்த நாள் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது.
vii). ஆயிரக் கணக்கானவர்கள் கங்கை நதியில் புனிதநீராடியதோடு வந்தேமாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள்.

R.MEGANATHAN.MA,B.Ed,GHSS,VEEDUR

***3. தன்னாட்சி (ஹோம்ரூல்) இயக்கத்தைத் தொடங்கியதன் மூலம் திலகரும் அன்னி பெசன்ட் அம்மையாரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தை 1916 ஆம் ஆண்டுக்குப் பின் எவ்வாறு தக்கவைத்தனர்?***

*i).லோகமான்ய பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் தலைமையிலான தன்னாட்சி (1916-1918) இயக்கத்தின் போது இந்திய தேசிய இயக்கம்புத்துயிரூட்டப்பட்டு தீவிரப் படுத்தப்பட்டது.*

*ii).முதல் உலகப் போரும், இந்தியா அந்தப் போரில் பங்கேற்றதும் தான் தன்னாட்சி இயக்கத்துக்கான பின்னணியாகும்.*

*iii).1914 ஆம் ஆண்டில் ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன் போர் அறிவித்தநிலையில் மித தேசியவாத மற்றும் தாராளமய தலைமை பிரிட்டிஷாருக்காக ஆதரவைத் தந்தது.*

*iv).அதற்குப் பதில் பிரிட்டிஷ் அரசு போருக்குப் பிறகு தன்னாட்சியை இந்தியாவிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது.*

*v).இந்தியாவின் தன்னாட்சிக்கு வழிவகுக்கும் காரணத்துக்கு உதவாமல் ஆங்கிலேய அரசு ஏமாற்றியதால் ஆங்கிலேய அரசுக்கு நெருக்க டி தரும் புதிய மக்கள் இயக்கத்துக்கான அழைப்பாக இது உருவெடுத்தது.*

*vi).1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார்.*

*vii).1916ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பொறுமையற்ற தமது ஆதரவாளர்களின் தொடர் கோரிக்கைகளை அடுத்து அன்னி பெசன்ட் அம்மையார் காங்கிரஸ் கட்சியின் ஆதரவின்றி தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பிக்க முடிவுசெய்தார்.*

*viii).இரண்டு அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்பட்டன. பத்திரிகை, உரைகள், பொதுக்கூட்டங்கள், விரிவுரைகள், விவாதங்கள் மற்றும் தன்னாட்சிக்கு ஆதரவான சுற்றுப்பயணம் ஆகியவை மூலமாகத் தீவிரப் பிரச்சார இயக்கத்தை நடத்த தன்னாட்சி இயக்கங்கள் பயன்பட்டன.*

**ALL THE BEST**

**BY**

**R.MEGANATHAN. MA,B.ed**
**( B,T ASST. SOCIAL SCIENCE)**
**GHSS, VEEDUR 605652**
**PH: 9543255318**

Padasalai
R.MEGANATHAN.MA,B.Ed,GHSS,VEEDUR